# உலக வங்கியின் உதவியுடன் தமிழகம் முழுவதும் 2,300 ஏரிகள் பழைய நிலைக்கு மீட்டெடுக்கப்படும்: உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தகவல்



**சென்னை:** தமிழகம் முழுவதும் 2,300 ஏரிகள், உலக வங்கி உதவியுடன் ஆழப்படுத்தப்பட்டு பழைய நிலைக்கு மீட்டெடுக்கப்படும் என உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

மழைக்காலங்களில் மழைநீர்வீணாக கடலில் கலப்பதை தடுக்கும் வகையில், தமிழகத்தில் 234 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் உள்ள ஏரி, கால்வாய்களை ஆழப்படுத்தி தூர் வாரவும், தேவையான இடங்களில் ஆழ்துளை கிணறுகளை அமைக்கவும், உரிய தடுப்பணைகளை கட்டவும் வலியுறுத்தி சென்னை செம்பியத்தை சேர்ந்த ஜி.தேவராஜன் என்பவர், உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.வி.கங்காபுர்வாலா மற்றும் நீதிபதி டி.பரத சக்ரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போதுமாநில அரசு ப்ளீடர் பி.முத்துக்குமார் மற்றும் சிறப்பு அரசு ப்ளீடர் ஆர்.அனிதா ஆகியோர் ஆஜராகி, தமிழகம் முழுவதும் நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி,தூய்மைப்படுத்த எடுத்த நடவடிக்கைகள் குறித்து தமிழக அரசுதரப்பில் பதில்மனு தாக்கல் செய்தனர். அதில் கூறியிருப்பதாவது:

நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்றி பாதுகாப்பது தொடர்பாக உயர் நீதிமன்ற உத்தரவுப்படி மண்டல, மாவட்ட, மாநில அளவில் குழுக்களை அமைத்து, கடந்த 2022 பிப்ரவரியில் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த ஜூன் மாத நிலவரப்படி 20,150 நீர்நிலை ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, 7,569 ஏரிகள் ஆக்கிரமிப்பு இல்லாமல் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மேலும், கேரளா, ஆந்திராவுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள நீர் பங்கீட்டு ஒப்பந்தங்கள் மீறப்படும்போது தமிழகத்தின் உரிமைகளை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நீர்நிலைகள் மராமத்து மற்றும் புதுப்பிப்பு, சீரமைப்பு திட்டத்தின்கீழ் தமிழகம் முழுவதும் 2,300 ஏரிகள், உலக வங்கி நிதியுதவியுடன் ஆழப்படுத்தப்பட்டு, அவற்றை பழைய நிலைக்கு மீட்டெடுக்கப்பட உள்ளன.

இவ்வாறு பதில் மனுவில் கூறப்பட்டுள்ளது.

அதை பதிவு செய்து கொண்டநீதிபதிகள், வழக்கை முடித்துவைத்து உத்தரவிட்டுள்ளனர்.

## பிரதமர் நரேந்திர மோடி - ஓமன் மன்னர் சந்திப்பு: இருதரப்பு உறவை பலப்படுத்துவது குறித்து ஆலோசனை

EVA STALIN



**புதுடெல்லி:** அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ள ஓமன் சுல்தான் (மன்னர்) ஹைதம் பின் தாரிக்கை பிரதமர் நரேந்திர மோடி நேற்று வரவேற்று விருந்தளித்தார்.

வர்த்தகம், முதலீடு உள்ளிட்டவை தொடர்பாக இருதரப்பு உறவை விரிவுபடுத்துவது தொடர்பாக அவர்கள் இருவரும் கலந்துரையாடினர். ஹைதம் பின் தாரிக் ஓமன் நாட்டு சுல்தானாகவும், பிரதமராகவும் 2020 ஜனவரி மாதம் பொறுப்பேற்றார். இந்நிலையில், அவர் 3 நாள் அரசு முறைப் பயணமாக இந்தியா வந்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை அவர் டெல்லிக்கு வந்தார். அவரை விமான நிலையத்தில் மத்திய வெளியுறவுத்துறை இணையமைச்சர் வரவேற்றார்.

நேற்று காலை குடியரகத் தலைவர் மாளிகைக்கு வந்த டெல்லியில் ஹைதம் பின் தாரிக்கை குடியரகத் தலைவர் திரவுபதி முர்முவும் பிரதமர் நரேந்திர மோடியும் வரவேற்றனர். அவருக்கு ராணுவ வீரர்களின் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. ஓமன் சுல்தானாக ஹைதம் பின் தாரிக் இந்தியா வருவது இதுவே முதல் முறையாகும். இந்நிலையில், அவரை வரவேற்ற பிரதமர் மோடி, "இந்தியா - ஓமன் உறவில் ஒரு வரலாற்று தருணம் இது. 26 ஆண்டுகளுக்குப் பிறகு ஓமன் சுல்தான் இந்தியாவுக்கு வருகை தருகிறார். இந்திய மக்கள் சார்பாக நான் அவரை வரவேற்கிறேன்" என்றார்.

டெல்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் மோடியும் ஹைதம் பின் தாரிக்கும் கலந்துரையாடினர். இருநாட்டு வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவை விரிவுபடுத்துவது தொடர்பாக அவ்விருவரும் உரையாடியதாக வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பக்சி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் எக்ஸ் தளத்தில் "இரு நாட்டுத் தலைவர்களும், அரசியல், பாதுகாப்பு, வர்த்தகம், பொருளாதாரம். கலாச்சாரம் உள்ளிட்ட தளங்களில் இருதரப்பு உறவை பலப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடினர். உள்நாட்டு மற்றும் சர்வதேச பிரச்சினைகள் குறித்தும் அவர்கள் பேசினர்" என்று பதிவிட்டுள்ளார்.

காசா மீது இஸ்ரேல் இரு மாதங்களுக்கு மேலாக தாக்குதல் நடத்தி வருகிற நிலையில், இவ்விவகாரம் குறித்தும் அவர்கள் பேசியுள்ளனர். டிஜிட்டல் கட்டமைப்பு. விண்வெளி ஆராய்ச்சி. பசுமை எரிஆற்றல் கட்டமைப்பு. சுகாதாரம். சுற்றுலா, வேளாண் துறை. உணவு பாதுகாப்பு ஆகியவை குறித்தும் ஆலோசனை நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாரணாசியில் காசி தமிழ்ச் சங்கமம்-2 இன்று தொடக்கம்: திருக்குறள், மணிமேகலை மொழிபெயர்ப்பு நூல்களையும் பிரதமர் மோடி வெளியிடுகிறார்



கோப்புப்படம்

**புதுடெல்லி:** உத்தரபிரதேச மாநிலம் வாரணாசி யில் காசி தமிழ்ச் சங்கமம்-2-ஐ பிரதமர் நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கவுள்ளார். இந்நிகழ்ச்சியில் திருக்குறள், மணிமேகலை நூல்களின் மொழி பெயர்ப்பு புத்தகங்களையும் அவர் வெளியிடவுள்ளார்.

உ.பி.யின் வாரணாசியில் கடந்த ஆண்டு டிசம்பரில் காசி தமிழ்ச் சங்கமம் நடைபெற்றது. தனது நாடாளுமன்ற தொகுதியில் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்த இந்நிகழ்ச்சி ஒரு மாதம் வரை நீடித்தது. வாரணாசி நகரத்துக்கு தமிழ்நாட்டுடன் உள்ள தொன்மையான தொடர்புகளை புதுப்பிக்கும் வகையில் மத்திய கல்வித்துறை இந்த நிகழ்ச்சியை நடத்தியது.

இந்த வருடமும் அதே நிகழ்ச்சி இன்று மாலை தொடங்கி 13 நாட்கள் வரை நடைபெற உள்ளது. இதையும். கடந்த முறையை போல், உ.பி. அரசு மற்றும் இதர சில மத்திய அமைச்சகங்கள் இணைந்து நடத்துகின்றன.

பெரும் வரவேற்பை பெற்ற இந்நிகழ்ச்சியை மீண்டும் பிரதமர் மோடியே தொடங்கி வைத்து சிறப்புரை நிகழ்த்துகிறார். இதற்காக இன்று பிற்பகல் வாரணாசி வரும் பிரதமர் அங்கு 2 நாள் தங்கி வேறு சில நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளவுள்ளார்.

இதற்காக தமிழகத்திலிருந்து பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த 1,400 பேர் 7 ரயில்களில் அரசு செலவில் அழைத்து வரப்படுகின்றனர். இவர்கள் இந்த 5 நாள் பயணத்தின்போது இந்த முறையும் பிரயாக்ராஜின் திரிவேணி சங்கமம் மற்றும் அயோத்தி ராமர் கோயில் தரிசனத்துக்கு அழைத்துச் செல்லப்படுவர். பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற இந்த சங்கமம் இந்த முறை. கங்கையின் கரைகளில் ஒன்றான நமோ காட்டில் நடைபெறுகிறது.

காசி தமிழ்ச் சங்கமம் -2 நிகழ்ச்சியைத் தொடங்கி வைக்கும் பிரதமர் மோடி. கன்னியாகுமரி முதல் காசி வரை செல்லும் புதிய ரயில் சேவையையும் காணொலி மூலம் தொடங்கி வைக்கவுள்ளார். 'இத்துடன் மத்திய அரசின் 1 செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் சார்பில் பதிப்பிக்கப்பட்ட மொழிபெயர்ப்பு நூல்களையும் பிரதமர் வெளியிடுகிறார்.

இதில், மாற்றுத்திறனாளிகள் படிக்கும் வகையில் பிரெய்லி முறையிலான திருக்குறள். சங்க இலக்கியம் மற்றும் இலக்கணங்களில் 46 நூல்கள் 2 இடம் பெற்றுள்ளன. 10 இந்திய மொழிகள் மற்றும் 5 வெளிநாட்டு மொழிகளிலும் " திருக்குறள் நூல்களை பிரதமர் மோடி வெளியிடுகிறார்.

இதுகுறித்து 'இந்து தமிழ் திசை' நாளேட்டிடம் மத்திய கல்வி அமைச்சகத்தின் பாரதிய பாஷா சங்கத்தின் தலைவரும் காசி தமிழ்ச் சங்கமம்-2-ன் அமைப்பாளருமான பேராசிரியர் பத்ம சாமுகிருஷ்ண சாஸ்திரி கூறும்போ து, ''இந்த முறை புதிதாக காசி தமிழ்ச் சங்கமம்-2-ல் பல புதிய நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. இந்நாட்களில் தமிழ்நாட்டிலும் பல இடங்களின் கல்வி நிலையங்களில் சங்கமம் பற்றிய கருத்தரங்குகளும், விவாதங்களும் நடைபெற உள்ளன.

இதில், காசி காண்டம், அகத்திய முனிவர் மீதான சிறப்புக் கூட்டங்களும் உண்டு. சித்த மருந்துகளின் தந்தையான அகத்தியரின் ஜென்ம ஜெயந்தி டிசம்பர் 29-ல் கொண்டாடப்படுகிறது. வாரணாசியுடன் இணைந்த தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியாருக்கு இந்த சங்கமத்திலும் முக்கியத்துவம் உண்டு. தமிழ்நாட்டிலிருந்து வருபவர்களுடன் வாரணாசி பொதுமக்கள் சந்தித்து கலந்துரையாட உள்ளனர்'' என்றார்.

இந்நிகழ்ச்சியில் பிரதமருடன் உ.பி.மாநில ஆளுநர் ஆனந்தி பென் படேல், முதல்வர் யோகி ஆதித்யநாத், மத்தியக் கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான், மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் எல்.முருகன், முன்னாள் மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

தொடர்ந்து வாரணாசி மற்றும் தமிழ்நாட்டுக்கு இடையிலான ஆன்மிகம், பண்பாடு, கலாச்சாரம் உள்ளிட்டவற்றை வெளிப்படுத்தும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன. சங்கமத்தின் நிகழ்ச்சிகளில் தமிழர்களான நாகாலாந்து ஆளுநர் இல. கணேசன், ஜார்க்க்கண்ட் ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன் ஆகியோரும், மத்திய அமைச்சர்களும் கலந்து கொள்கின்றனர். தமிழக

ஆளுநரான என்.ரவியும் டிசம்பர் 19, 20 ஆகிய 2 தினங்களுக்கு வாரணாசிக்கு வந்து பங்கேற்கவுள்ளார்.

நிகழ்ச்சிக்கான முக்கிய ஏற்பாடுகளை செய்யும் பொறுப்பு வாரணாசி மாவட்ட ஆட்சியரான எஸ்.ராஜலிங்கம் எனும் தமிழரிடம் அளிக்கப்பட்டுள்ளது.

## 1971-ல் பாகிஸ்தானுடனான போரில் உயிர்த் தியாகம் செய்தோருக்கு மோடி, முர்மு மரியாதை



**புதுடெல்லி:** பாகிஸ்தானுடன் 1971-ல் நடைபெற்ற போரில் இந்தியா வெற்றி பெற்ற தினம் ஆண்டுதோறும் வெற்றி தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. இதை முன்னிட்டு ராணுவ மாளிகையில் நேற்று நடைபெற்ற ‘அட் ஹோம்' வரவேற்பு நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு கலந்து கொண்டார்.

இந்நிலையில் வெற்றி தினத்தைமுன்னிட்டு தனது எக்ஸ் தளத் தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ‘‘1971-ல் நடைபெற்ற போரின்போது நமது பாதுகாப்பு படைகள் செய்த தன்னலமற்ற தியாகத்தை தேசம் நன்றியுடன் நினைவு கூர்கிறது. இணையற்ற துணிச்சலை வெளிப்படுத்தி வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெற்ற துணிச்சலான நெஞ்சங்களுக்கு விஜய் திவாஸ் (வெற்றி தினம்) தினத்தில் தலை வணங்குகிறேன்’’ என பதிவிட்டுள்ளார்.

பிரதமர் மோடி தனது எக்ஸ் சமூக வலைதளத்தில், ‘‘1971-ல் இந்தியாவுக்கு பணிவுடன் சேவை செய்து, தீர்க்கமான வெற்றியை உறுதி செய்த துணிச்சலான

மாவீரர்களுக்குஇதயப்பூர்வமான அஞ்சலியை செலுத்துகிறோம். நமது இந்திய வீரர்களின் வீரம் மற்றும் அர்ப்பணிப்பு தேசத்துக்கு மகத்தான பெருமையாக உள்ளது. இந்திய வீரர்களின் தியாகம் என்றென்றும் மக்களின் இதயங் களிலும் நமது தேசத்தின் வரலாற்றிலும் பொறிக்கப்படும்'' என பதிவிட்டுள்ளார்.

## Gemini AI மாடல் அறிமுகம்: ஏஐ ரேஸில் முந்தும் கூகுள்?




**சான் பிரான்சிஸ்கோ:** அண்மையில் கூகுள் நிறுவனம் ஜெமினி எனும் ஏஐ மாடலை அறிமுகம் செய்தது. மானிடர்களை போல சிந்தித்து செயல்படும் திறனை ஜெமினி கொண்டுள்ளதாக சொல்லப்படுகிறது. இதன் மூலம் டெக் நிறுவனங்களுக்கு இடையில் நிலவும் ஏஐ ரேஸில் கூகுள் முந்துவதாக சொல்லப்படுகிறது.

கடந்த 2022-ம் ஆண்டின் இறுதியில் உலக அளவில் கவனம் பெற்றது ஓபன் ஏஐ நிறுவனத்தின் சாட் ஜிபிடி. இதன் கட்டமைப்பு பணியில் மைக்ரோசாஃப்ட் நிறுவனம் நிதி உதவி அளித்ததாக தெரிவிக்கப்பட்டது. அதற்கு முன்னர் வரை ஏஐ நம்முடன் இருந்தாலும் ஜெனரேட்டிவ் ஏஐ-யான சாட்ஜிபிடி ஏற்படுத்திய தாக்கம் வேறு வகையில் இருந்தது. உரையாடல் முறையில் பயனர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு பதில் அளித்தது இந்த சாட் பாட். இதற்கு ஜிபிடி லேங்குவேஜ் மாடல் உதவுகிறது.

அதன் மூலம் தொழில்நுட்ப உலகில் சாம்ராட் ஆக இயங்கி வரும் கூகுள் நிறுவனத்துக்கு சவால் வைக்கப்பட்டது. அதை தொடர்ந்து LaMDA, PaLM 2 லேங்குவேஜ் மாடல்களை கூகுள் களம் இறக்கியது. இந்த சூழலில் அண்மையில் ஜெமினி ஏஐ மாடலை அறிமுகம் செய்துள்ளது. இது இந்த லேங்குவேஜ் மாடல்களின் வரிசையில் வெளிவந்துள்ளது.

**ஜெமினி ஏஐ?** மல்டிமாடல் லாரஜ் லேங்குவேஜ் மாடலை கொண்டு வடிவமைக்கப்பட்டது ஜெமினி. இதை வடிவமைத்தது கூகுள் டீப்மைண்ட் பிரிவு டெக் வல்லுநர்கள். கடந்த மே மாதம் நடைபெற்ற கூகுள் ஐ/ஓ நிகழ்வில் ஜெமினி குறித்த அறிமுகம் வாய்மொழியாக இருந்தது. தற்போது செயல் வடிவம் பெற்று உள்ளது. இது கூகுளின் பார்ட் சாட் பாட்-க்கு அதீத திறனை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதோடு பிக்சல் 8 புரோ ஸ்மார்ட்போனில் மெசேஜிங் சர்வீஸில் ஆட்டோமெட்டிக்காக பயனர்கள் ரிப்ளை வழங்குவதற்கான அம்சத்தை வழங்கும் என கூகுள் தெரிவித்துள்ளது.

இப்போதைக்கு ஜெமினியின் நானோ மற்றும் புரோ வெர்ஷன் மட்டுமே அறிமுகமாகி உள்ளது. இதுவும் பயனர்களுக்கு பல்வேறு கட்டங்களாக கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜெமினியின் அல்ட்ரா வெர்ஷன் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் அறிமுகமாகும் என தெரிகிறது. தற்போதைக்கு ஆங்கிலத்தில் மட்டுமே இது இயங்குகிறது. கூகுளின் தேடு பொறிகளிலும் (சேர்ச் என்ஜின்) ஜெமினி மாடல் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அது எப்போது என தெரிவிக்கப்படவில்லை.

டெக்ஸ்ட், போட்டோ மற்றும் வீடியோக்களை அடையாளம் காணும் அம்சத்தை கொண்டுள்ளது ஜெமினி. ப்ராப்ளம் சால்விங் திறனில் ஜெமினி அட்வான்ஸ்டு நிலையில் உள்ளதாகவும் கூகுள் தெரிவித்துள்ளது. மனித வாழ்வை அறிவியல் சார்ந்த முன்னேற்றங்களுக்கு இது வழிவகுக்கும் என ஏஐ ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.